*The Paper Published in the Book of 'Impact of Postwar Development in Sri Lanka' (in Tamil) by South Eastern University of Sri Lanka / Kumaran Publication in 2020*

# Postwar Development Activities and Its Ecological Impacts in Sri Lanka.

MTM Mahees,
Department of Sociology, University of Colombo,
**mahees@soc.cmb.ac.lk**

## யுத்தத்திற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தியும் அதன் சூழல் விளைவுகளும்

**ஆய்வுச் சுருக்கம்**

உலகளாவிய ரீதியிலும் எமது நாட்டிலும் இன்று பல வகையான பாரிய பௌதீக அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்தகைய அபிவிருத்தியினை மேற்கொள்ள பல்வேறுபட்ட செலவுகள் காணப்படுகின்றன. அபிவிருத்திக்கான நிதி மாத்திரமன்றி சூழல் மற்றும் சூழலுடன் தொடர்புபட்ட சமூக கலாசார செலவுகளையும் இனங்காணக் கூடியதாக உள்ளது. இத்தகைய பாரிய அபிவிருத்தி செயற்றிட்டங்கள் (Mega Development Projects) பல்வேறு வகையான அபாய நேர்வுகளைக் (Risk) கொண்டதாக உள்ளது. இலங்கையின் முப்பது வருடகால யுத்தத்தின் பின்பு துரிதமாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளும் எம்மால் இலகுவாக இனங்காண முடியாதளவு சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றது. அத்தகைய முறையில் இலங்கையின் யுத்தத்திற்குப் பின்பு மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளினால் ஏற்படுத்தப்பட்ட சூழல்ரீதியிலான விளைவுகளைப் பகுப்பாய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 90இக்கட்டுரையானது சூழல் சமூகவியல் மற்றும் அபிவிருத்தி பற்றிய அரசியல், சூழல் ஜனநாயகம் போன்ற கருத்துக்களைக் கொண்ட நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இரண்டாம் நிலைப் புள்ளி விபரங்களை மையமாகக் கொண்டு தொகுப்பாய்வு செய்யப்பட்ட வாதங்களை (Discourse) அடிப்படையாகக் கொண்டு முன்வைக்கப்படுகின்றது. இவ்வாய்வுக் கட்டுரையின் பிரதான பெறுபேறுகள் பண்பு சார்ந்த கருத்துருவாக்க ரீதியான விடயங்களாகக் காணப்படுகின்றன. சூழல் வளங்கள் அழிக்கப்படுதல், இயற்கை அனர்த்தங்கள் அதிகரித்தல், இயற்கை வளங்களை மையமாகக் கொண்ட வன்முறைகள், சூழல் இயக்கங்கள் உருவாகுதல், மக்கள் இடம் பெயர்தல், மனித வனவிலங்குகளுக்கு இடையிலான முரண்பாடுகள், சூழல் உரிமைகள் மற்றும் சூழல் ஜனநாயகம், சூழல் வறுமை போன்ற பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இவ்வகையான சமூக சூழல் பிரச்சினைகளுக்கு அரசியல் சூழலியல் தோற்றப்பாடு மற்றும் அரசியல் பொருளாதாரப் பின்னணியிலேயே புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

**அறிமுகம்**

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற பாரிய அபிவிருத்தித் திட்டங்களை விமர்சனமாகப் புரிந்து கொள்வதற்கு அரசியல் சூழலியல் (Political Ecology) மிக முக்கியமானது. மூன்றாம் உலக நாடுகளில் உள்ள சூழலுக்கும் அதிகாரக் கட்டமைப்புக்கும் இடையேயுள்ள தொடர்பின் மிக ஆழமாகவும் விமர்சனமாகவும் விளங்கிக் கொள்ள மூன்றாம் உலக நாடுகளுக்கான அரசியல் சூழலியல் முக்கியமானதாகும். Bryant மற்றும் Baily (1997) என்பவர்களின் கருத்துப்படி மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திக்கும் சமூக பொருளாதாரத்துக்கும் இடையிலான தொடர்பினை இயற்கை வளங்கள் மற்றும் சூழலை மையமாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது. இயற்கை வளங்களுக்கும் சமூகத்துக்கும் இடையிலான முரண்பாட்டு ரீதியான தொடர்பை அரசியல் சூழலியல் மூலம் புரிந்து கொள்ளலாம். இலங்கையில் யுத்தத்திற்குப் பின்பு நிகழ்ந்து வரக் கூடிய துரித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் அரசியலுக்கும் இடையிலான தொடர்பினை அரசியல் சூழலியல் மூலம் நன்கு மேலும் விமர்சனமாக இவைகளைக் காணலாம்.

மனித வரலாற்றில் முன்பு ஒரு போதும் இல்லாதது போன்று இன்று அபிவிருத்தி என்ற பேரில் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. Foster (2011) இன் கருத்துப்படி மாக்ஸ் மற்றும் ஏங்கல்ஸ் இருவரும் சூழல் பிரச்சினைகள் தொடர்பாகத் தமது நேரடியான கருத்துக்களைச் சொல்லாவிட்டாலும் முதலாளித்துவத்தால் சூழலுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பினை மறைமுகமாக எடுத்து விளக்கினார்கள். மாக்ஸின் கருத்துப்படி முதலாளித்துவ செயல்முறைக்குள் இயற்கை என்பது ஒரு சாதாரண பொருளாகவே கருதப்படுவதுடன் இயற்கையை விற்பனை செய்யவும் விலை கொடுத்து வாங்கவும் முடியும் என்றே முதலாளித்துவ உற்பத்தி முறை கருதி வருகின்றது. ஆகவே, இயற்கை வளங்கள் முதலீடு அல்லது தனியார் இலாபமாகவே இங்கு கருதப்படுகின்றது. மாக்ஸ் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், இயற்கைக்கும் சமூகத்துக்கும் இடையிலான சுமூகமான தொடர்பினை முறியடித்து இயற்கை வளங்களை அழிக்கக் கூடிய முறையிலேயே முதலாளித்துவம் செயல்படுகின்றது (Gore, 1992). மாக்ஸ் கூறக்கூடிய இந்த முறையிலேயே உலகம் பூராகவும் இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று உலகெங்கும் அடையாள நுகர்வுவாதம் (Symbolic Consumption) அதிகரித்துக் கொண்டு வருகின்றது. மக்கள், பொருட்கள் சேவைகளை நுகர்வதை விட அடையாளங்களையே நுகர்ந்து வருகின்றனர். பிரதான பின் நவீனத்துவவாதியாகிய Jean Baudrillard (1998) இன கருத்துப்படி தற்கால மக்களின் பயன்பாட்டு பெறுமதி (Use Value) மற்றும் பரிமாற்றுப் பெறுமதி (Exchange Value) போன்ற இரண்டையும் விட குறியீட்டுப் பெறுமதியை (Sign Value) மையமாகக் கொண்ட நுகர்வுக் கலாசாரத்தினை உருவாக்கி வருகின்றனர். உலக நாடுகள் தமது அரசியல்

பலத்தையும் பொருளாதார வளத்தையும் எடுத்துக் காட்ட அடையாள ரீதியான பல பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களைச் செய்து வருகின்றன. சீனாவில் உள்ள Tree Gorges அணைக்கட்டு, டுபாயின் புது விமான நிலையம், ஜேர்மனி மற்றும் டென்மார்க்கிற்கு இடையிலான புகையிரதப் பாதை இவற்றுக்கான ஒரு சில உதாரணங்களாகும். இத்தகைய பாரிய அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பல்வகையான சூழல் அனர்த்த நிலையை ஏற்படுத்துகின்றன (Flyrbjerg, 2003).

பிரபல்ய சமூக புவியியலாளரான Ulrich Beck தனது Risk Society (1992) என்ற நூலில் தற்போது நாம் வாழக் கூடிய உலகம் பல முறைகளில் ஒரு அனர்த்த ரீதியான சமூகமாகக் காணப்படுகின்றது என்கின்றார். குறிப்பாக நவீன சமூகம் தமது அபிவிருத்திகளை மையமாகக் கொண்ட நவீனமயப்படுத்தப்பட்ட பல்வேறு வகையான சூழல் பிரச்சினைகளையும் சமூக அனர்த்த நிலைகளையும் ஏற்படுத்துகிறது. Ulrich Beck இன் கருத்துப்படி முன்னைய காலங்களில் இயற்கையானது மனித கலாசாரத்தினைத் தீர்மானித்தது. ஆனால் இன்று கலாசாரம் இயற்கையைத் தீர்மானிக்கக் கூடிய அளவிற்குச் செல்வாக்குப் பெற்றுள்ளது. இங்கு கலாசாரம் என்பது மனிதனால் உருவாக்கப்படுகின்ற பௌதீக மற்றும் வாழ்க்கை முறை ரீதியான அனைத்து விடயங்களையும் மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற படைப்புக்களையும் உள்ளடக்குகின்றது. மனிதனால் கட்டப்பட்டு வருகின்ற துரிதப் பாதைகள், நீர் அணைக்கட்டுக்கள், மின்சார உற்பத்தி நிலையங்கள் மற்றும் புதிய குடியேற்றங்களும் இவற்றுள் அடங்கும்.

இன்று உலகின் பல பகுதிகளிலும் காணக்கூடிய சூழல் பிரச்சினைகளை அரசியல் பொருளியல் (Political Economy) என்ற கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள முடியும். இவ்வகையில் காணக்கூடிய சூழல் பிரச்சினைகளுக்குப் பின்னால் இயங்கக் கூடிய மறைமுகமான சக்தியாக இருப்பதும் அரசியல் பொருளாதாரமேயாகும். தற்போதைய இலங்கைச் சமூகத்திலுள்ள காடழிப்பு, மண் அகழ்வு, நீர் மாசடைதல், திண்மக் கழிவகற்றல், வனவிலங்குகளின் பிரச்சினை போன்ற அனைத்து சூழல் பிரச்சினைகளுக்கும் பின்னால் அதிகார உறவு முறையினை அல்லது அதிகாரக் கட்டமைப்பினைக் காணக் கூடியதாகவுள்ளது.

அபிவிருத்தி செயற்றிட்டங்களுடன் இணைந்து செயற்படக் கூடிய அரசியலைப் புரிந்து கொள்ள மற்றுமோர் முக்கியமான கருத்தினை ஒரு பின்நவீனத்துவவாதியாகிய Micheal Foucault வெளியிட்டுள்ளார். இவரின் கருத்துக்கிணங்க அதிகாரமும் அறிவும் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படுகின்றது. இங்கே அறிவு என்பது கருத்தியல்வாதத்தினை (Discourse) குறித்து நிற்கின்றது. அபிவிருத்தி தொடர்பான சிந்தனைகள், கருத்துக்கள், கொள்கைகள் அபிவிருத்தி கருத்தியல்வாதம் மூலமே ஏற்படுத்தப்படுகின்றது என்று விளக்குகின்றார். அதாவது பொருள்முதல்வாத அபிவிருத்திச் செயற்றிட்டத்துக்கும் அதனுடன் தொடர்புடைய அரசியல்வாதத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. பூக்கோவின்

கருத்துப்படி தற்போதைய சமூக ஒழுங்கானது (Social Order) அரசியல் உறவு முறைகள் இயற்கையினைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு நீண்டகால அபிவிருத்தி நடவடிக்கைகளை அடைந்து கொள்ள முயற்சித்து வருகின்றது (Mahees, 2010).

பொருள்முதல்வாத அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கும் அரசியல் செயற்றிட்டங்களுக்கும் இடையேயுள்ள நெருங்கிய தொடர்பினை மேலும் விளக்குவதற்கு குன்னா Gunnar Myrdal (1968) மென்மை அரசுக் கோட்பாடு (Soft State Theory) முக்கியமானது. அவரின் கருத்தின்படி அனேகமான மூன்றாம் உலக நாடுகளின் சூழல் உட்பட அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் போதுமானளவு சட்டங்கள் காணப்பட்டாலும் அவற்றினை நடைமுறையில் கடைப்பிடிக்கக் கூடிய செயல் குறைவாகவே உள்ளது. அதாவது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் சூழலைப் பாதுகாக்கப் போதுமான அளவு சட்டங்கள், அறநெறி விதி, ஒழுங்கு முறைகள் காணப்பட்டாலும் அவை தந்திரமாகவும் சூழ்ச்சிகரமாகவும் முறியடிக்கப்படுகின்றது. இலங்கையிலுள்ள தற்போதைய நிலையும் இதற்குப் பெரிதும் சாதகமாக உள்ளது. அதாவது இலங்கையில் சூழலை, இயற்கை வளங்களை மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாக்கத் தேவையானளவு சட்டதிட்டங்கள் காணப்பட்டாலும் ஏதோவொரு வகையில் சூழல் சட்டங்கள் முறியடிக்கப்படுகின்றன. இத்தகைய சூழல்ச் சட்ட மீறல்களுக்கு அரசியல் அதிகாரம் காரணமாகவுள்ளது.

Li மற்றும் Reuveny (2006) என்பவர்களின் கருத்துப்படி ஜனநாயகத்திற்கும் சூழல் பிரச்சினைகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. அவர்கள் மேலும் கூறுகையில், ஜனநாயகம் சில சந்தர்ப்பங்களில் சூழல் பிரச்சினைகளைக் குறைப்பதோடு, சில சந்தர்ப்பங்களில் சூழல் பிரச்சினைகள் அதிகரிக்க வழி செய்கின்றது என்கின்றனர். எனவே இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளின் போது ஜனநாயகம் சூழல் பிரச்சினைகளை அதிகரிக்கின்றதா அல்லது குறைக்கின்றதா என ஆய்வு செய்ய வேண்டிய தேவையுள்ளது.

**தற்கால இலங்கையின் சூழல் பிரச்சினைகள்**

இலங்கை ஓர் அபிவிருத்தி அடைந்துவரும் நாடு என்ற வகையில் பல்வேறு வகையான சூழல் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இச்சூழல் பிரச்சினைகள் முற்றுமுழுதாக மக்களுடைய அன்றாட சமூக-பொருளாதார மற்றும் கலாசார விடயங்களோடு தொடர்புபட்டவை. எனவே, இலங்கையின் அனைத்து சூழல் பிரச்சினைகளும் ஒரு வகையான சமூகப் பிரச்சினைகள் என வாதாட முடியும். ஏனென்றால் இத்தகைய சூழல் பிரச்சினைகளுக்கு மூல காரணங்களாக அமையும் பின்னணி சமூக, கலாசார மற்றும் அரசியல் பொருளாதாரத்தில் உருவாக்கப்படுவதுடன், இச்சூழல் பிரச்சினைகளின் விளைவுகளும் சமூக-கலாசார,

பொருளாதாரத் தாக்கத்தினை அதிகப்படுத்தியுள்ளன. உதாரணமாக மனித வன விலங்குகளுக்கு இடையிலான பிரச்சினை (Human-wild life Conflicts), முறையற்ற கழிவகற்றல் (Improper Waste Disposal), நீர் மாசடைதல் போன்ற அனைத்துச் சூழல் பிரச்சினைகளின் மூலகாரணமும் அவற்றின் விளைவுகளும் சமூக பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் காரணிகளை மையமாகக் கொண்டே இயங்குகின்றது.

Hanningam (2006) கூறும் முறைக்கேற்ப அனேகமான சூழல் பிரச்சினைகள் சமூக ரீதியாக நிர்மாணிக்கப்படுகின்றன. இலங்கையில் சூழல் பிரச்சினைகள் சமூக அல்லது அரசியல் வாதங்களை (Socio-political Discourses) மையமாகக் கொண்டு நிர்மாணிக்கப்படுகின்றது. எனவே சூழல் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதிலும் அவற்றினைத் தீர்த்து வைப்பதிலும் சமூகவியல் அல்லது சூழல் சமூகவியலின் பங்களிப்பு (Environmental Sociology) மிக முக்கியமானதாகும்.

மூன்று தசாப்த கால யுத்தத்திற்குப் பின்னர், இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் சூழல் பிரச்சினைகளை அதிகரித்து வருகின்றன. சூழல் என்பது வெறும் இயற்கை அல்லது இயற்கை வளங்களை மட்டுமே குறிப்பிடுவதில்லை. சூழலின் இரண்டு பகுதிகள் உள்ளன. அவையாவன: இயற்கைச் சூழல் (Natural Environment) மற்றும் கட்டப்பட்ட சூழல் (Built Environment). அவற்றுள் இயற்கைச் சூழலானது இயற்கையாக உருவானதாகும். நகர நிர்மாணம், புதுக்குடியேற்றங்கள், நீர்வள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட உவர் நிலங்கள் (Construted Wetlands) மற்றும் தேசிய பூங்காக்கள் (National Parks) என்பன கட்டப்பட்ட சூழலுக்குள் உள்ளடங்குகின்றது.

யுத்தம் முடிவடைந்ததற்குப் பின்னர் ஏற்பட்ட சமூக சூழல் பிரச்சினைகளில் பிரதானமான பிரச்சினையே காடுகள் அழிக்கப்படுதலும் அதனைத் தொடர்ந்து ஏற்படுகின்ற வனவிலங்குகளுக்கும் மனிதனுக்கும் இடையிலான முரண்பாடுகளாகும். இலங்கையின் காட்டுவளம் படிப்படியாக குறைவடைந்து வருவதுடன் எஞ்சியுள்ள காடுகள் சிறிய சிறிய பகுதிகளாக நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. 1900ம் ஆண்டு 70 வீதம் இலங்கையின் நிலப்பிரதேசம் காடுகளாகக் காணப்பட்டது. அது 1956ம் ஆண்டில் 44 வீதமும் 1989ம் ஆண்டில் 28 வீதமும் தற்போது அண்ணளவாக 15 வீதமுமாகக் குறைவடைந்துள்ளது (Thilakarathne, 2000). இத்தகைய முறையில் காடுகள் அழிக்கப்படுவதன் காரணமாக பல்வேறு சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. உயிர் பல்லினத்தன்மை அழிக்கப்படுதல், மண்சரிவு மற்றும் வனவிலங்குகள் ஆபத்தான நிலைக்கு ஆளாக்கப்படுதல் என்பன பிரதான பிரச்சினைகளாகும்.

இலங்கை அதி உயர் உயிர்ப்பல்லினத்தன்மை (Higher Bio-divercity) கொண்ட நாடாக இருப்பதுடன் இலங்கையில் ஒரு குறுகிய நிலப்பரப்பில் பல்வேறுபட்ட தன்மை கொண்ட இயற்கை வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கலாசார சூழலியலையும் (Cultural Ecology) காணக் கூடியதாக உள்ளது. இலங்கையைப் போன்று கடல்கள், நதிகள், ஆறுகள், நீர்வீழ்ச்சிகள் மற்றும் குளங்கள் உள்ள நாடுகள் மிகவும் அரிது. அதேபோன்று சிங்கராஜ போன்ற அதியுயர் பல்லினத்தன்மை உள்ள காடுகள், மலைகள், சேற்று நிலங்கள் எமது சூழல் அமைப்பை மேலும் வலுப்படுத்துகின்றன. இவையனைத்தையும் விட இலங்கையில் மாத்திரம் காணக்கூடிய பறவைகள், மீன்கள், பாம்புகள், பூச்சிவகைகள் என்பன எமது நாட்டின் இயற்கையின் பெறுமதியை வலுவூட்டுகின்றது. இன்று இவற்றின் பிரதான அன்னியச் செலாவணியை ஈட்டக் கூடிய சுற்றுலாத்துறை முழுவதும் முற்றாக இலங்கையின் கரையோரங்கள், காடுகள், நீர்வீழ்ச்சிகள், யானைகள், டொல்பின்கள் மற்றும் பறவைகளிலேயே தங்கியுள்ளது. ஆனால் இங்கே குறிப்பிடப்பட்ட அனைத்து இயற்கை வளங்களும் வனவிலங்குகளும் அபிவிருத்தி நடவடிக்கை காரணமாக பாரிய ஆபத்துக்கு ஆளாகியுள்ளன.

வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அறிக்கைகளுக்கு ஏற்ப கடந்த பத்து வருடங்களில் அண்ணளவாக 2000 யானைகள் கொல்லப்பட்டுள்ளதுடன் யானைகளால் 1200 மக்களும் இறந்துள்ளனர். 2015ம் ஆண்டு மாத்திரம் 200 யானைகள் கொல்லப்பட்டுள்ளன. இவ்வாறு தொடர்ச்சியாக யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுவதற்குப் பிரதான காரணம் இலங்கையின் பொருளாதாரமும் விவசாயக் கொள்கைகளும் அபிவிருத்தி திட்டங்களுமே (Karunaratne, 2011) ஆகும். யுத்தத்தின் பின்னர் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்ற நிலையற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளானவை (Unsustainable Development Activities), யானைகளுடன் மட்டுமன்றி பல்வேறு வனவிலங்குகள் மனிதர்களுடன் முரண்பாடுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் சமூக சூழல் பிரச்சினைகளை உருவாக்கி வருகின்றன. உதாரணமாக, வனவிலங்குகளின் இயற்கை வதிவிடங்கள் (Natural Habitats) அழிக்கப்படுவதன் காரணமாக மயில்கள், குரங்குகள், மர அணில்கள், காட்டுப் பன்றிகள் போன்றன மக்கள் வாழும் பிரதேசங்களுக்கு இடம்பெயர்ந்து மக்களின் விவசாயம், வாழ்வாதாரம் உட்பட நாளாந்த வாழ்க்கைக்குப் பல சவால்களை ஏற்படுத்தி வருகின்றன. குறிப்பிட்ட ஒரு சில வெப்பவலய பிரதேசங்களில் மாத்திரம் முன்னர் காணப்பட்ட மயில்கள் இன்று கொழும்பு மாவட்டம் உட்பட அனைத்துப் பிரதேசங்களுக்கும் இடம்பெயர்ந்து மக்களுக்கு மட்டுமன்றி இலங்கையின் உணவுச்சங்கிலி அமைப்புக்கும் ஆபத்துக்களை ஏற்படுத்தி வருகின்றன. அதேபோன்று சிறுத்தை, கரடிகள் மற்றும் முதலைகள் குறைந்து வருவதன் காரணமாக மயில்கள், குரங்குகள், காட்டுப் பன்றிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது.

இத்தகைய முறையில் வனவிலங்குகளின் இடம்பெயரலுக்கும் அச்சுறுத்தலுக்கும் துரித அபிவிருத்தி நடவடிக்கைகள் முக்கியமான காரணமாக உள்ளது. உதாரணமாக, துரித வீதி

அபிவிருத்திகள், சூரியவெவ கிரிக்கட் மைதானம், மத்தல விமான நிலையம் உருவாக்கப்பட்டமை என்பன நேரடியான காரணங்களாக உள்ளன. மக்கள் முன்னரைப் போன்று மயில், குரங்கு, காட்டுப்பன்றி மற்றும் மரஅணில்களைக் கலாசார அல்லது சமயக் காரணங்களை மையமாகக் கொண்டு தற்போது வேட்டையாடப்பட்டமையும் இப்பிரச்சினைக்கு ஒரு காரணமாகும்.

Mahees (2010) இன் கருத்துப்படி ஓர் நாட்டின் அதீத அபிவிருத்தியைப் (Over Development) போன்றே கீழ் அபிவிருத்தியும் (Underdevelopment) சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்துவதனால், அபிவிருத்திக்கும் சூழல் பாதுகாப்பிற்கும் இடையே எதிர்க்கணிய தொடர்பே காணப்படுகின்றது. எனவே, தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற துறைமுக நகரம (Port City), கொழும்பு-கண்டி கடுகதி வீதி, மின் உற்பத்தி நிலையங்கள், வீடமைப்புத் திட்டங்கள் எதிர்காலத்தில் நம்மால் நினைக்க முடியாதளவிற்குப் புது வகையான சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

முப்பது வருட கால யுத்தம் முடிவடைந்ததற்குப் பிறகு, நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் குடியேற்றங்கள் அதிகரிக்கப்பட்டு, இடம்பெயர்ந்து வாழ்ந்த மக்கள் தம்மால் கைவிடப்பட்ட பிரதேசங்களுக்கு மீண்டும் சென்று வீடுகளை மீளப்புதுப்பித்தலுடன் விவசாய நடவடிக்கைகளையும் ஆரம்பித்ததால் புது நகரங்களும் கிராமங்களும் உருவாகின. இதன் காரணமாக பல சமூக சூழல் பிரச்சினைகளோடு மாத்திரம் நின்று விடாமல் சூழல் பிரச்சினைகளை மையமாகக் கொண்டு இன ரீதியான பதட்ட நிலைகளை (Ethnic Tension) இது ஏற்படுத்துகின்றது. தற்போது இலங்கையில் மக்கள் மத்தியில் பரவலாக உரையாடப்படுகின்ற வில்பத்துப் பிரச்சினை இதற்குச் சிறந்த உதாரணமாகும். யுத்தத்திற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற துரித நகரமயமாக்கல், கொழும்பு போன்ற நகரவாசிகளின் சனத்தொகை அதிகரிப்பு, திண்மக் கழிவு உட்பட கழிவுப் பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றன.

இன்று இலங்கையில் பிரதானமானதும் அதிக பணச் செலவுடன் மேற்கொள்ளப்படக் கூடியதும் உள்ளூராட்சி மன்றங்களின் முதன்மைத் தொழிற்பாடாகவும் திண்மக் கழிவகற்றல் மாறியுள்ளது. Mahees (2018) மற்றும் Bandara (2008) என்போரின் கருத்துக்கேற்ப இன்று இலங்கையில் தலா திண்மக் கழிவு உற்பத்தி (Per capita Solide Wsate Generation) 0.42Kg ஆக இருக்கின்றது. கொழும்பு நகரத்தின் தலா திண்மக்கழிவு உற்பத்தி 0.85 Kg ஆக இருக்கின்றது. ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளை விட திண்மக் கழிவு உற்பத்தி இலங்கையில் அதிகமாகக் காணப்படுகின்றது. இலங்கையின் சராசரி நாளாந்தத் திண்மக் கழிவு உற்பத்தி 8000-15000 மெட்றிக் தொன்னிற்கு உட்பட்டதாக உள்ளது. ஒரு நாளில் சராசரியாக உற்பத்தி செய்யப்படுகின்ற 12,500 மெட்ரிக் தொன் திண்மக்கழிவுகளில் 40வீதக் கழிவுகளே முறையான முறையில் அகற்றப்படுவதுடன், ஏனையவை முறையற்ற மற்றும் பாதுகாப்பற்ற முறையில் அகற்றப்படுகின்றது. கொழும்பில் உற்பத்தி செய்யப்படுகின்ற திண்மக் கழிவுகள் புத்தளம்

மாவட்டத்தின் அறுவாக்காட்டுப் பிரதேசத்தில் முகாமைத்துவம் செய்யப்படவுள்ள திட்டம் பல சமூக அரசியல் பிரச்சினைகளுக்குக் காரணமாகியுள்ளது.

நகரங்களில் உருவாக்கப்படுகின்ற கழிவுக்குப் பின்னால் பாரிய அரசியல்-பொருளாதார இயந்திரமே (Political Economic Mechanism) இயங்கி வருகின்றது. கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள் பங்குதாரர்கள் மத்தியில் மறைமுகமான இலஞ்சம், ஊழல் மற்றும் அதிகரித்த து்‘பிரயோகம் நிகழ்ந்து வருகின்றது. கொழும்பு மீதொட்டமுல்ல குப்பை மலையால் ஏற்பட்ட மரணம், இழப்பு என்பன கழிவு அரசியலுக்குச் (Waste Politics) சிறந்த உதாரணமாகும். இதே போன்று கொழும்பில் உருவாக்கப்படுகின்ற கழிவானது புத்தளம் பிரதேசத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு முகாமைத்துவம் செய்யப்படவுள்ள செயற்றிட்டம் எத்தனையோ சவால்களை ஏற்படுத்தி வருகின்றது.

Tennakoon மற்றும் Mahees (2018) என்போரின் கருத்துப்படி இன்று அதிகமாகச் சூழல் ரீதியான பாரபட்சங்கள் (Environmental Discrimination) நிகழ்ந்து வருவதும் யுத்தத்தின் பின்னர் அபிவிருத்தி நடவடிக்கைகள் பல்வேறு வகையான சமூக சூழல் சவால்களை ஏற்படுத்துவதற்கான சிறந்த உதாரணமாகும். எனவே, யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட புதிய சன இடப்பெயர்வு, உப புதிய நகரங்களில் சனத்தொகை அதிகரித்தல், புது வகையான வாழ்க்கை முறை, பின் நவீனத்துவ வாழ்க்கை (Postmodern Life) முறையை உள்ளடக்கிய நுகர்வுக் கலாசாரம், விரைவாகத் தயாரிக்கப்படும் உணவுகள் (Fast food), Supermarket துணைக் கலாசாரம் போன்றவை திண்மக் கழிவு உற்பத்தி மற்றும் முகாமைத்துவப் பிரச்சினைளை ஏற்படுத்தி வருகின்றன.

நாள்தோறும் அதிகரித்து வரும் திண்மக் கழிவு நாட்டுக்குப் பல்வேறு வகையான சமூக அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன (Mahees, 2018a). திண்மக் கழிவு முகாமைத்துவமானது மத்திய அரசாங்கத்திற்கும் மாகாணசபைக்கும் உள்ளூராட்சி மாற்றங்களுக்கும் இடையே பாரிய அரசியல் அதிகாரப் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன. இங்கே ஆபத்தான கழிவுகள் (Hazadous Waste) மருத்துவமனைக் கழிவுகள் (Clinical Waste) என்பவற்றைக் குறைந்த வருமானம் பெறும் அதிகாரமற்ற மக்கள் வாழும் பிரதேசங்களுக்குள் அகற்றுதல் ஒரு வகையான சூழல் இனவாதமாகக் (Ecological Racism) கருதப்படுகின்றது (Haningham, 1996). யுத்தத்தின் பின்னர் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற துரித அபிவிருத்தி மற்றும் சொகுசான நுகர்வுக் கலாசாரம் காரணமாகப் பொருளாதார வசதியுள்ள உயர் அல்லது மத்திய தர வகுப்பினரால் உருவாக்கப்படுகின்ற திண்மக் கழிவுகள் சமூக ரீதியாகப் பிற்படுத்தப்பட்ட (Social Marginalized) மக்கள் வாழும் பிரதேசங்களில் அகற்றுதல் அல்லது முகாமைத்துவச் செயற்றிட்டங்களை மேற்கொள்ளுதல் சூழல் பிரச்சினையை விட சமூக அரசியல் பிரச்சினையாக மாறி வருகின்றது.

யுத்தத்திற்குப் பின்னர் ஏற்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக அதிகரித்து வருகின்ற அனர்த்தங்கள் (Disasters) மற்றுமொரு பிரதானமான பிரச்சினையாகக் காணப்படுகின்றது. முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு கடந்த தசாப்தத்தில் இலங்கையானது பல்வேறு வகையான அனர்த்தங்கள் மற்றும் காலநிலைப் பிரச்சினைகளுக்கு (Climate Change Issues) முகங்கொடுத்து வருகின்றது. வெள்ளம், மண்சரிவு மற்றும் வரட்சி போன்ற அனர்த்தங்கள் பல்வேறு வகையான பாதிப்புக்களை ஏற்படுத்தியது. சர்வதேச அனர்த்த அவதானிப்பு நிலையத்தின் (2018) புள்ளிவிபரத்தின் படி இலங்கை அதிக காலநிலை அனர்த்தங்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது நிலையை வகிக்கின்றது.

அபிவிருத்தி என்ற பெயரில் காடுகள் அழிக்கப்படுதல், சேற்று நிலங்கள் நிரப்பப்படுதல், நதிக்கரையோரங்களில் மற்றும் மலைப்பிரதேசங்களில் மக்கள் குடியேறுதல், தவறான முறையில் நிலங்கள் பண்படுத்தப்படுதல் என்பன காரணமாக மண்சரிவு மற்றும் வெள்ளம் சார் இயற்கை அனர்த்தங்களாக ஏற்படுகின்றன. புதிய வீதிகள் நிர்மாணிக்கப்படும் போது மலைகள் பாதுகாப்பற்ற முறையில் வெட்டப்படுதல், இயற்கையான நீர்ப்பாதைகள் தடுக்கப்படுதல் போதியளவு வடிகால் அமைப்புக்கள் இல்லாமை காரணமாகச் சாதாரண மழைக்குக் கூட வெள்ளம் ஏற்படுகின்றது. எனவே வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்றனவும் அரசியல் பொருளாதார காரணங்களால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளாகும்.

**சூழல் ஜனநாயகம்**

இன்று உலகெங்கும் பரவலாகக் கலந்துரையாடப்படுகின்ற ஒரு பிரதான வாதமே சூழல் ஜனநாயகம் (Ecological Demography) ஆகும். நாம் வாழும் சூழல் மற்றும் இயற்கை வளங்கள் பொதுச் சொத்தாகவே கருதப்படுகின்றது. நாம் சுவாசிக்கும் காற்று, பூமிக்குக் கீழுள்ள நீர், இயற்கையின் அழகு அனைத்துமே பொதுச் சொத்தாக இருப்பதுடன் அனைத்து மக்களும் இவற்றைச் சமமாக அனுபவிக்க வேண்டும். இது ஒரு வகையில் சூழல் உரிமையாகக் (Environmental Rights) கருதப்படுகின்றது. ஆனால் இன்று அபிவிருத்தி என்ற பேரில் சூழல் உரிமைகள் மற்றும் சூழல் ஜனநாயகம் மீறப்படுகின்றது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கக் கூடிய மிக முக்கியமான சூழலியலாளராகிய Vandana Siva (1991) இன் கருத்துப்படி, அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் துரித அபிவிருத்தியை மையமாகக் கொண்ட போட்டி மற்றும் முரண்பாடுடைய இரண்டு குழுவினரை இனங்காணலாம். முதலாவது அபிவிருத்திச் செயற்றிட்டங்களால் நன்மையடையக் கூடியவர்கள், இரண்டாவது அபிவிருத்தித் திட்டங்களினால் பாதிப்பிற்கு ஆளாகக் கூடியவர்கள். உதாரணமாக கொழும்பு மாத்தறை கடுகதிப் பாதை, மொரகஹகந்த நீர்ப்பாசனத் திட்டம் காரணமாக

நன்மையடைந்தவர்களைப் போலவே அதனால் பாதிப்புக்குள்ளானவர்கள் இருக்கின்றனர். எனவே அபிவிருத்திச் செயற்றிட்டம் காரணமாக சமூகத்தின் ஒரு பகுதியினர் தமது வாழ்வாதாரம், வீடுகள், காணிகள் மற்றும் அவர்கள் இயற்கையுடன் கொண்டுள்ள உறவு போன்றவற்றை இழக்க வேண்டியுள்ளது. தன்னுடைய வயல் அல்லது காணியூடாகக் கடுகதிப் பாதை அமைக்கப்பட்டிருந்தாலும் தமக்கென அதனைப் பயன்படுத்த முடியாதளவு மக்கள் வாழ்கின்றனர்.

அதேபோன்று யுத்தத்தின் பின்பு நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின்நிலையம் நாட்டின் கணிசமான மின்சாரத் தேவையைப் பூர்த்தி செய்தாலும் அப்பிரதேசத்தில் வாழும் மக்கள் பல சூழல் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றனர். Mahees (2012) இன் கருத்துப்படி அதிகாரமற்ற, வருமானம் குறைந்த, சமூக ரீதியாகப் புறக்கணிக்கப்பட்ட அப்பாவி மக்களே அபிவிருத்தி காரணமாக தமது சூழல் உரிமைகளை இழக்கின்றனர்.

எனவே இவ்வகையில் அதிகமான அபிவிருத்திச் செயற்றிட்டங்களால் விவசாயிகள், மீனவர்கள், சிறுபான்மை மக்கள், ஜாதி ரீதியாக அதிகாரம் குறைந்தவர்கள் மற்றும் பெண்கள் பாதிப்பிற்கு ஆளாகி வருகின்றனர். இம்மக்களின் சூழலை மையமாகக் கொண்ட வாழ்வாதார அமைப்பு (Life Supporting Ecological System) மற்றும் சூழலையொட்டிய கலாசாரம் என்பன அழிக்கப்படுகின்றன. உதாரணமாக, இலங்கையில் ஜாதி முறை முற்றிலும் சூழல் அமைப்பை அல்லது இயற்கை வாழ்வை மையமாகக் கொண்ட தொழில் அல்லது வாழ்வாதாரத்தினை மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது. விவசாயம், மீன்பிடித்தல், கள் உற்பத்தி மற்றும் மட்பாண்டங்கள் தயாரித்தல் என்பன ஜாதி முறையுடன் தொடர்புபட்டுள்ளது. அபிவிருத்தி காரணமாக இயற்கை வாழ்விடங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்பு, இயற்கை வளங்களை அடைப்படையாகக் கொண்ட ஜாதிக் குழுக்களுக்குத் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது.

அதே போன்று நகரங்களில் வாகனப் பாவனை அதிகரித்தல், தொலைப்பேசிக் கோபுரங்கள் நிர்மாணிக்கப்படுதல், கதிர்வீச்சு அல்லது நச்சு வாயுக்களை வெளியிடக் கூடிய தொழிற்சாலைகள் நிர்மாணிக்கப்படுதல் என்பன மக்கள் மத்தியில் பல்வேறு சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றது. உதாரணமாக, நிலையற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் காரணமாகவே குப்பைகள் அதிகரிப்பதுடன் அதனால் நீர் மாசடைந்து டெங்குநோய் போன்ற பாரிய நோய்கள் ஏற்பட்டு எமது நாட்டின் சூழல் சுகாதாரப் பிரச்சினைகளில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்தி வருகின்றது.

Mahees (2010) இன் Environmental Movements in Sri Lanka என்ற நூலில் கூறியதற்கேற்ப, இன்று அபிவிருத்தி செயற்றிட்டங்கள் காரணமாக மக்களின் சூழல் உரிமைகள் முறியடிக்கப்படுகின்றது. இதன் காரணமாக மக்கள் தமது சூழல் உரிமை மற்றும் சூழல் ஜனநாயகத்தினை பாதுகாக்கச் சூழல் போராட்டங்களை (Environmental Movements)

ஏற்படுத்தி வருகின்றனர். இன்று உலகெங்கும் சூழல் இயக்கங்கள் நிலையற்ற அபிவிருத்திக்கு எதிராக செயற்பட்டு வருகின்றது. இத்தகைய சூழல் இயக்கங்கள் அல்லது கீழ் மட்டத்தில் செயல்படக் கூடிய கூட்டுச் சூழல் செயற்பாடுகள் (Collection Grassroots Environmental Actions) நிலையான அபிவிருத்தி மற்றும் சூழல் ஜனநாயகம், சூழல் உரிமை போன்றவற்றைப் பாதுகாக்க தீவிரமான முறையில் செயற்பட்டு வருகின்றன. Vandana Shiva (1991) & Mahees (2013) என்பவர்களின் கருத்துப்படி சூழல் இயக்கங்கள் சூழலுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களைத் தடுத்து நிறுத்தியுள்ளது. உதாரணமாக, இந்தியாவின் நர்மதா அணைக்கட்டு பாரம்பரிய மற்றும் கீழ் ஜாதி மக்களின் வருகைக்கும் சூழல் தொகுதிக்கும் எதிராகப் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தால் நர்மதா சூழல் இயக்கத்தால் அது தடுத்து நிறுத்தப்பட்டது.

இந்தியாவின் அபிவிருத்தி என்ற பேரில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு செயற்றிட்டங்களுக்கு எதிராக பெண்களை மையமாகக் கொண்ட சூழல் இயக்கங்கள் போராடி வந்துள்ளன (Agarval, 1997). இதனையே சூழல் பெண்நிலைவாதம் (Ecofeminism) என அழைக்கப்படுகின்றது. யுத்தத்திற்குப் பின்பு இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்களுக்கு எதிராகவும் பல போராட்டங்கள், இயக்கங்கள் உருவாக்கப்பட்டன. இலங்கையில் தேசிய ரீதியான பாரிய சூழல் இயக்கங்கள் காணப்படாவிட்டாலும் வெவ்வேறான அபிவிருத்தித் திட்டங்களை அடிப்படையாக வைத்துச் சூழல் போராட்டங்கள் இலங்கைச் சமூகத்தின் கட்டமைப்பை மையமாகக் கொண்டு உருவாகிய விடயம் குறிப்பிடத்தக்கதாகவுள்ளது. உதாரணமாக, நுரைச்சோலை அனல் மின்நிலையம், கொழும்பு கட்டுநாயக்க கடுகதி வீதி, கொழும்பு மாத்தறை கடுகதி வீதி, உமா ஓயா நீர்த்தேக்கம் மற்றும் வெளிவேரிய நீர்மாசடைதல் தொடர்பான போராட்டங்கள் அல்லது இயக்கங்களைக் குறிப்பிடலாம (Mahees, 2018b). அபிவிருத்தியுடன் தொடர்புடைய இத்தகைய சூழல் இயக்கங்கள் வெறும் சூழல் பிரச்சினைகளை மாத்திரம் மையமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டவை அல்ல. இப்போராட்டங்கள் இயக்கங்களுக்குப் பின்னால் வாழ்வாதாரம், அரசியல் மற்றும் மத கலாசார அடையாளங்களின் முக்கிய பங்கினை வகிக்கின்றன. எனவே அபிவிருத்தி ரீதியான அரசியல் இலங்கையின் சூழல் இயக்கங்களில் முக்கிய பங்கினை வகிக்கின்றது.

**முடிவுரை**

முப்பது ஆண்டுகால சிவில் யுத்தக் காலப்பகுதியில் பொருளாதாரம் உட்பட பௌதீக அபிவிருத்திகள் மட்டுப்படுத்தப்பட்டதாகவே நடைபெற்றது. யுத்தம் முடிவுக்கு வந்ததன் பின்பு யுத்த வெற்றியை மையமாகக் கொண்டு அரசாங்கம் சமூகத்தில் பலம் வாய்ந்தததாகவும் மக்களின் வாக்கு அதிகாரத்தினைப் பெற்று அரசியல் ரீதியாக வலுவடைந்தது. இவ்வதிகாரத்தினைப் பயன்படுத்தி பல அபிவிருத்திச் செயற்றிட்டங்களைச் செய்ய அரசாங்கம்

முன்வருகின்றது. அரசாங்கம் தனது நீண்டகால குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு நிலையான அபிவிருத்தியைப் பெரிதும் கவனிக்காது பாரிய அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வந்தது.

குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களுக்குட்பட்ட நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் வீதி அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்தது. கொழும்பு கட்டுநாயக்க மற்றும் கொழும்பு மாத்தறை கடுகதி வீதி உட்பட நாட்டின் எல்லாப் பிரதேசங்களிலும் நிர்மாணிக்கப்பட்ட வீதி வலைப்பின்னல் அமைப்பு பல்வேறு வகையான பிரச்சினைகளை ஏற்படுத்திற்று. குறிப்பாக சூழல் பாதுகாப்பையோ நிலையான அபிவிருத்தியையோ கவனத்தில் கொள்ளாது நிர்மாணிக்கப்பட்ட வீதிக் கட்டமைப்பானது மண்சரிவு மற்றும் வெள்ளம் போன்ற பாரிய சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தியது.

வீதி அபிவிருத்திக் கட்டமைப்பைப் போலவே விவசாய மற்றும் வீடமைப்புக் குடியேற்றங்கள், தொழிற்சாலைகள், துறைமுகங்கள், மின்னுற்பத்தி நிலையங்களின் வருகையானது காடுகள், உவர்நிலங்கள் உட்பட இயற்கைச் சூழல் அமைப்பிற்கும் ஆபத்தான நிலையை ஏற்படுத்தி வருகின்றது. இத்தகைய நிலையற்ற அபிவிருத்தி காரணமாக மனித வன விலங்குகளுக்கு இடையிலான முரண்பாடு மற்றும் காலநிலை மாற்றங்கள் என்பன ஏற்பட்டு வருகின்றன. யுத்தத்திற்குப் பின்பு ஏற்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் காரணமாக பல்வேறுபட்ட சமூக சூழல் பிரச்சினைகள் ஏற்பட்டது. இதன் விளைவாக மக்கள் போராட்டங்களிலும் சூழல் இயக்கங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் சில குழுக்கள் சூழல் ரீதியான பாரபட்சங்களுக்கும் சமூக ரீதியான புறக்கணிப்புக்களுக்கும் ஆளாக்கப்படுகின்றன. அதேபோன்று இத்தகைய அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் சூழல் உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தினைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

யுத்தத்திற்குப் பின்பு வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற நுகர்வுவாதம் பல்வேறு வகையான புதுப்புதுச் சூழல் பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றது. குறிப்பாக, சொகுசான வீடுகளைக் கட்டுதல், வாகனங்கள் அதிகளவில் இறக்குமதி செய்யப்படுதல், சொகுசான உணவகங்கள், அதிநவீன சந்தை வாய்ப்புக்களைக் கொண்ட கட்டடத் தொகுதிகள் மற்றும் தொலைபேசிக் கோபுரங்கள் தாபிக்கப்படுதல் ஆகியன சூழல் தொகுதிக்குப் பல தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன. எனவே எதிர்வரும் காலங்களில் திண்மக் கழிவு அதிகரித்தல், நீர் வளங்கள் மாசடைதல், வளிமண்டலம் மாசடைதல், எதிர்பாராத சூழல் சுகதாராப் பிரச்சினைகள் ஏற்படுதல் என்பன தவிர்க்க முடியாதவையாகக் காணப்படும்.

எனவே, யுத்தத்தின் பின்னர் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை அரசியல் பொருளாதாரம், அரசியல் சூழலியல் மற்றும் சூழல் ஜனநாயகம் போன்றவற்றை வாதங்கள் மற்றும் கோட்பாடுகள் மூலம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். அதே

போன்று அரசியல் மயப்படுத்தப்பட்ட சூழல் தொகுதியும் அபிவிருத்தியும் நடவடிக்கைகளும் இலங்கையை ஓர் அனர்த்த ரீதியான சமூகத்தினை நோக்கிக் கொண்டு செல்கின்றது. இத்தகைய அனர்த்த ரீதியான சமூக நிலைமை இலங்கையின் நீண்ட கால சமூக பொருளாதார மற்றும் சூழல் பாதுகாப்பிற்குப் பெரிதும் ஆபத்தாகவே அமையும்.

**Refences**


Agarwal, B. (1997). The Women, Gender and Development, The Gender and Environment Debate, Lesson from India. London: Zed Books Ltd.

Bryant, R. L. and Bailey, S. (1997). Third World Political Ecology. London: Routledge.

Baudrillard, J. (1998). The Consumer Society, New Delhi. Sage Publications.

Beck, U. (1992). Risk Society. Towards a New Modernity, London: Sage.

Bandara, N., (2008). Municipal Solid Waste Management: A Sri Lankan Case. University of Sri Jayawardenepura: Department of Forest and Environmental Science.

Foster, J. B. (2001). Marx's Ecology. India: Cornerstone Publications.

Flyvbjerg, B. (2003). Mega Projects and Risk. London: Cambridge University Press.

Hannigan, J. (2006) Environmental Sociology. London and New York: Routledge.

Karunaratne,H.K.N. (2011). Human Elephant Conflict in Sri Lanka, Spatial pattern, factors and solutions, Parliamentary Research Journal. Vol I, No1

Li, Q, and Reuveny, R. (2006). Democracy and Environmental degradation: International Studies Quarterly, 50: 935-956Gare, G.A. (1995). Post-modernism and Environmental Crisis. London: Routledge

Mahees, M. T.M, (2010). Environmental Movements in Sri Lanka, Germany: VDM Publisher.

Mahees, M.T.M. (2012). Development and Environmental Politics. Parliamentary Research Journal, Sri Lanka. (in Sinhala)

Mahees, M. T. M. (2013), Environmentalism, Third World Environmental Movements and Sri Lankan Experiences, Journal of Samaaja Vimasuma by Dept of Sociology, University of Peradeniya, Vo 15, ( in Sinhala)

Mahees. M T M, (2018a), Socio-cultural Aspects of Solid Waste Crisis in Sri Lanka. Colombo Journal of Multi-Disciplinary Research Faculty of Graduate Studies, University of Colombo. Vol 03, No. 02

Mahees. M T M, (2018 b). Water Resources, Dams and Development: A Critical Sociological Review. Professor Sarath Amarasingher Felicitation Volume, University of Ruhuna, Matara

Myrdal, G. (1968). The Soft State in Underdeveloped Countries, Available on: http://heinonlinebackup.com/hol-cgi-bin/get_pdf.cgi?handle=hein.journals/.
Tilakaratne, W. M. (2000). Sri Lanka Economic Policy, Sustainable Development am Deforestation, Samajeeya Vidya Vimarshana, 1. (in Sinhala).
Tennakoon, S.D.R. & Mahees, M.T.M, (2019). Human- Elephant Conflict and Environmental Journalism in Sri Lanka. 19 International Journal of Science Arts and Commerce Vol. 4 No.2, February. Available on www.ijsac.net
Shiva, V. (1991). Ecology and the Politics of Survival. New Delhi: Sage publication.

**Acknowledgment**

I extend my special thanks to Dr. A. Rameez, Senior Lecturer in Sociology and Dean Faculty of Arts and Culture, Soth Eastern University of Sri Lanka for all the kind supports given to me in publishing this paper and Ms. Luxshe Kunaratnam, Lecturer Open University of Sri Lanka (Batticaloa)